மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

114—

சுற்றுலாத் தலம்

***24730—திரு. ச. பழனிச்சாமி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, மாரம்பாடி ஊராட்சியிலுள்ள புனித அந்தோணியார் திருத்தலப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, மாரம்பாடியிலுள்ள புனித அந்தோணியார் திருத்தலம், திண்டுக்கல் நகரிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இத்திருத்தலத்தில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் செய்வதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.*

[2014 ஜூலை 11

திரு. ச. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 கோடி தமிழ் மக்களின் வாழ்க்கையாக இருப்பவர் எங்கள் அம்மா; ஒன்றரை கோடி கழகத் தொண்டர்களின் உயிர் மூச்சாக இருப்பவர் எங்கள் அம்மா; ஒப்பாரும் மிக்காரும் இல்லாத உயர்ந்த பண்பாளர் எங்கள் அம்மா; மக்களின் உரிமையை மீட்க பிறந்தவர் எங்கள் அம்மா; 'இரட்டை இலை' என்னும் தாரக மந்திரத்தால் எதிரிகளை வீழ்த்தியவர் எங்கள் அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) 37—ல் முடி சூடியவர் எங்கள் அம்மா; சட்டமன்றத் தேர்தலில் மட்டுமல்ல, உள்ளாட்சித் தேர்தல், இடைத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் ஆகிய அனைத்துத் தேர்தல்களிலும் இமாலய வெற்றியைப் பெற்றவர் எங்கள் அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, காவேரியிலே வெற்றி, முல்லை பெரியாறிலே வெற்றி, நெய்வேலியிலே வெற்றி, நயவஞ்சகர்கள் தொடுத்த அனைத்து வழக்குகளிலும் வெற்றி. இப்படி வெற்றி மேல் வெற்றி பெற்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அடுத்துவரும் சட்டமன்றத் தேர்தலிலும் அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றி வாகைச் சூடுவார். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய சிறப்புகளைப் பெற்ற எங்கள் தாயின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி, மாரம்பாடி என்னும் கிராமத்தில் உள்ள புனித அந்தோணியார் திருத்தலமானது மிகவும் பிரசித்திப் பெற்றது. அந்த வட்டார மக்கள் மட்டுமல்லாது, அண்டை மாவட்ட மக்களும் வந்து தரிசித்துச் செல்லக்கூடிய ஒரு புனிதத் திருத்தலம். மேலும், அண்டை மாநிலத்திலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும்கூட யாத்திரிகர்கள் வந்து செல்லக்கூடிய ஒரு புனிதத் திருத்தலமாக இத்திருத்தலம் விளங்கி வருகிறது. ஆண்டுதோறும் சிறப்பான முறையிலே அங்கு திருவிழாக்களும், விழாக்களும் நடத்தப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த இந்தத் திருத்தலத்தில் சுற்றுலாத் துறையின் மூலமாக எந்தவித அடிப்படை வசதிகளும் இதுவரை செய்யப்படாத காரணத்தினால், அங்கு வரக்கூடிய மக்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, சுற்றுலாத் துறைமூலம் தங்கும் விடுதி, கழிப்பறை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பீர்களேயானால், இந்தத் திருத்தலமானாது மேலும் சிறப்புப் பெற்று விளங்கும் என்பதை

இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, இந்தத் திருத்தலத்தில் வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்து, இந்தத் திருத்தலம் மேலும் சிறந்து விளங்குவதற்கு உதவும்படி கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை எந்த ஓர் இடத்தையும் அல்லது பகுதியையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. எனினும் உறுப்பினர் குறிப்பிட்ட இடத்தின் சுற்றுலா முக்கியத்துவம், அப்பகுதிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையினைக் கருத்தில்கொண்டு, அங்கு தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொள்வது குறித்து தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவரின்மூலம் விரிவான திட்ட மதிப்பீடு மற்றும் கருத்துரு பெறப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. ச. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கருத்துருவைப் பெற்று, அங்கே சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கையின் அடிப்படையிலே, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பதாக வாக்குறுதி அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*